தனியுரிமையுடைய ஆயுர்வேத மருத்துவம்

INTAS

# தைமோட்டாஸ்

## 12.5 mg

### பொருள் பற்றிய விவரங்கள்

தைமோட்டாஸ் என்பது தைமோகுவினோனின் காப்புரிமை பெற்ற ஆராய்ச்சி கலவையாகும். நிலையான, தரப்படுத்தப்பட்ட மற்றும் பயன்படுத்த தயாராக உள்ள இந்த மருந்தை உலகிற்கு முதன் முறையாக வழங்கியது இண்டாஸ் (ஐணஞ்ச்ண்) நிறுவனமாகும்.

நிஜெல்லா சாடிவா, ஆஸ்துமா, உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய்,வீக்கம், இருமல், மூச்சுக்குழாய் அழற்சி, தலைவலி, அரிக்கும் தோல் நோய்கள், தலைச்சுற்றல் மற்றும் காய்ச்சல் உள்ளிட்ட பல நோய்களுக்குச் சிகிச்சையளிக்க வெவ்வேறு வடிவங்களில் பயன்படுத்தப்படுகிறது. அதன் நன்மை பயக்கும் மருந்தியல் பண்புகளுக்கு நிஜெல்லா சாடிவாவில் மிகுதியாக இருக்கும் தைமோக்வினோனே காரணமாகும்.




படம் : தைமோக்வினோனின் இரசாயன அமைப்பு

### அறிவியல் ஆராய்ச்சிகள் மற்றும் மருந்தியல் பண்புகள்

தைமோகுவினோனைப் பற்றி ஏராளமான அறிவியல் வெளியீடுகள் உள்ளன. அதன் பல பண்புகளோடு, வைரஸ், பாக்டீரியா எதிர்ப்பு, ஆன்டி ஆக்ஸிடென்ட், அழற்சி எதிர்ப்பு, நீரிழிவு நோய், புற்று நோய் எதிர்ப்பு மற்றும் ஹெபடோபிரோடெக்டிவ் பண்புகளும் அடங்கும்.

### வைரஸ் எதிர்ப்புத் தன்மைகள்

தைமோகுவினோன், பாதிக்கப்பட்ட எலிகளின் மண்ணீரல் மற்றும் கல்லீரலில் உள்ள மரைன் சைட்டோமெகலோவைரஸின் (சி.எம்.வி) பிரதி எடுத்தலைத் தடுப்பதாக நிரூபிக்கப்பட்டுள்ளது.மேலும், தைமோக்வினோன் சிகிச்சை சீரம் இன்டர்ஃபெரான்-γ (ஐ.எஃப்.என்- γ) மற்றும் சிடி 4 + டி செல்கள் மற்றும் மேக்ரோஃபேஜ்களின் எண்ணிக்கையை அதிகரித்தது. ஹெபடைடிஸ் சி வைரஸ் (எச்.சி.வி) நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டதன் விளைவாகச் சிவப்பு ரத்த அணுக்களின் எண்ணிக்கை அதிகரித்தது

மற்றும் குறைந்த வைரஸ் சுமை மூலம் ஆன்டி ஆக்ஸிடென்ட் செயல்பாடு, மற்றும் புரத அளவும் குறைந்தது. சமீபத்தில், தைமோகுவினோன் மற்றும் குர்குமின் சேர்க்கை, வான்கோழிகளில் ஏவியன் இன்ஃப்ளுயன்ஸா வைரஸுக்கு (H9N2) எதிராக ஒரு ஒருங்கிணைந்த விளைவைக் காட்டின. மேலும், இந்தக் கலவையானது வான்கோழிகளின் வைரஸுக்கு எதிரான நோயெதிர்ப்பு சக்தியை அதிகரித்தது. தைமோகுவினோன் பாதிக்கப்பட்ட பி அணுக்கள், அதாவது, எப்ஸ்டீன்-பார் வைரஸ் (ஈபிவி) - ஐ தடுப்பதாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

### பாக்டீரியாவுக்கு எதிரான தாக்கம்

இது கிராம்-பாசிட்டிவ் மற்றும் கிராம்- நெகடிவ் பாக்டீரியாக்களின் பல இனங்களுக்கு எதிராகப் பரந்த பாக்டீரியா எதிர்ப்பு விளைவுகளைக் காட்டியது. பேசிலஸ் செரியஸ், எஸ். ஆரியஸ் மற்றும் எஸ். எபிடெர்மிடிஸ் போன்ற கிராம்-பாசிட்டிவ் பாக்டீரியாக்கள் இதற்கு அதிகமாக இலக்காகும் தன்மையைக் காட்டியுள்ளன. மேலும், அது

மெதிசிலின்-எதிர்ப்பு ஸ்டெஃபைலோகாக்கஸ் ஆரியஸ் (எம்ஆர்எஸ்ஏ) - க்கு எதிரான செயல்பாடுகளையும் காட்டியது.தைமோகுவினோன், எஸ். ஆரியஸ், எஸ். எபிடெர்மிடிஸ், என்டோரோகோகஸ் ஃபேகேலிஸ், மற்றும் பி. ஏருகினோசா உள்ளிட்ட சில பாக்டீரியா வகைகளில் பயோஃபிலிம் உருவாவதைத் திறம்படத் தடுப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. தைமோகுவினோன், எம். காசநோய் பாதிப்பு மற்றும் எதிர்ப்பு ஆகிய இரண்டிற்குமான ஒரு சாத்தியமான மருந்தாகக் கண்டறியப்பட்டுள்ளது.

### அழற்சி எதிர்ப்புப் பண்புகள்:

தைமோகுவினோன், பல்வேறு உறுப்புகளில் ஏற்படும் அழற்சிக்கான எதிர்ப்புச் செயல்பாட்டைக் கொண்டிருப்பதாக விவரிக்கப்பட்டுள்ளது.இது கட்டி நெக்ரோஸிஸ் காரணி (டி.என்.எஃப்), தூண்டக்கூடிய NOS, COX-2, 5- லிபோக்சைஜனேஸ் மற்றும் சைக்ளின் டி 1 போன்ற அழற்சி-சார்பு மற்றும் பெருக்கக்கூடிய இடையீடுகளின் வெளிப்பாட்டைக் குறைப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. டிரான்ஸ்கிரிப்ஷன் காரணி அணுசக்திக் காரணி செயல்படுத்தப்படுவதையும், கப்பா பி (NF-) KB), ஏகேடி, மற்றும் புற-சமிக்ஞை-ஒழுங்குபடுத்தப்பட்ட கைனேஸின் (ERK) சமிக்ஞைப் பாதைகளையும்

இது தடுத்தது. மீஊஓஆ ஐ ஒடுக்குதல், தைமோகுவினோனை, வீக்கம், பெருக்கம், ஆக்கிரமிப்பு, கட்டி உயிரணுவின் உயிர்வாழ்வு, மற்றும் ஆஞ்சியோஜெனெஸிஸைத் திறப்படத் தடுக்கிறது.

### ஆன்டி ஆக்ஸிடென்ட் பண்புகள்:

தைமோகுவினோன் அயனி மற்றும் ஆர்ஓஎஸ் (எதிர்வினை ஆக்ஸிஜன் இனங்கள்) ஆகியவற்றைத் வெளியேற்றுவதன் மூலம் சக்திவாய்ந்த ஆன்டி ஆக்ஸிடென்டாகச் செயல்படுவதாகக் கண்டறிப்பட்டுள்ளது. அது இஸ்கிமிக் மறுபயன்பாட்டுக் காய நிலைகளை மேம்படுத்தலாம் மற்றும் குடல், இதயம் மற்றும் சிறுநீரகத்தில் ஆர் ஓ எஸ் (ROS) - ஐ குறைக்கிறது. இது ஆக்ஸிஜனேற்ற அழுத்த மாதிரிகளிலும் பல உறுப்பு நச்சுத்தன்மையைச் சரிசெய்கிறது.அணுக்களின் ஆன்டி ஆக்ஸிடென்ட் செயல்பாடுகளிலுள்ள அடிப்படைக்கூறுகளுக்கு எதிராகப் பாதுகாப்பளிக்கும் பல சுரப்பிகளின் செயல்பாடுகளைப் பாதிக்கிறது. தைமோகுவினோன், குறைந்த மாலோண்டியல்டிஹைட் (எம்.டி.ஏ) அளவால் ஏற்படும் லிப்பிட் பெராக்சிடேஷனின் (எல்பிஓ)

Front Side

மேம்பட்ட அளவைக் குறைப்பது அதன் வலுவான ஆன்டி ஆக்ஸிடென்ட் தன்மையாக அங்கீகரிக்கப்படலாம். தைமோகுவினோனின் குயினோன் அமைப்பு அதன் ஆன்டி ஆக்ஸிடென்ட் விளைவுடன் தொடர்புடைய ரெடாக்ஸ் பண்புகளைக் கொண்டுள்ளது. கூடுதலாக, மார்போபிசியாலஜிக்கல் தடைகளைத் தாண்டுவதற்கான அதன் அளவிட முடியாத திறன் உப அணு உள்ள இடங்களை எளிதாக அணுக வழிவகுக்கிறது மற்றும் தீவிரமான வெளியேற்ற விளைவை எளிதாக்குகிறது.

### நீரிழிவு எதிர்ப்புப் பண்புகள்:

ஆக்ஸிஜனேற்ற அழுத்தத்தால் கணையத்தின் யு-அணுக்களுக்கு ஏற்படும் சேதத்திலிருந்து பாதுகாப்பதில் தைமோகுவினோன் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் மற்றும் இது கல்லீரல் குளுக்கோனோஜெனீசிஸைக் குறைக்கிறது. இது இன்சுலின் எதிர்ப்பு, புரத கிளைகேஷன், நீரிழிவு நெஃப்ரோபதி மற்றும் பல நீரிழிவு எதிர்ப்புப் பண்புகளைக் கொண்டுள்ளது. தைமோக்வினோனின், ஆன்டி ஆக்ஸிடென்ட், சைட்டோபுரோடெக்டிவ் மற்றும்

இம்யூனோமோடூலேட்டிங் நடவடிக்கைகள் நீரிழிவு நோய் மற்றும் அதனால் ஏற்படும் சிக்கல்களுக்குச் சிகிச்சையளிப்பதில் மருந்தியல் ரீதியாகப் பொருத்தமானதாக அமைகிறது.

### புற்றுநோய் எதிர்ப்புப் பண்புகள்:

ககூஉமீ (பாஸ்பேடேஸ் மற்றும் டென்சின் ஹோமோலாக்) மரபணு மற்றும் சைக்ளிண்டெண்டென்ட் கினேஸ் இன்ஹிபிட்டரை ஒழுங்குபடுத்துவதன் மூலம் அப்போப்டொசிஸைத் தூண்டுவதிலும், செல் சுழற்சியைத் தடுப்பதிலும் தைமோகுவினோன் ஒரு முக்கியப் பங்காற்றுகிறது. ஏராளமான புற்றுநோய் உயிரணுக்களுக்கு எதிராகத் தைமோகுவினோனின் புதிய மூலக்கூறு இலக்கு அல்லது புற்றுநோய் வளர்ச்சியைத் தடுப்பது என்பது புரதக் கைனேஸ், மீஊஓஆ, ஆஞ்சியோஜெனெசிஸ் மற்றும் டூமோரிஜெனெசிஸ் ஆகியவற்றின் பண்பேற்றமாகும். ஏராளமான

தைமோகுவினோனின் புற்றுநோய்த் தடுப்புத் திறனை மதிப்பிடுவதற்கு விலங்கு மாதிரி மற்றும் ஆய்வக ஆராய்ச்சி அடிப்படையிலான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### ஹெபட்டோ பாதுகாப்புப் பண்புகள்:

தைமோகுவினோனின் ஹெபடோபிரோடெக்டிவ் செயல்பாடு விரிவாக ஆய்வுச் செய்யப்பட்டுள்ளது. இது ஹெபடோடாக்சிசிட்டி மற்றும் கல்லீரல் நோய்களுக்கு எதிரான ஒரு சிறந்த இயற்கையான பாதுகாப்புக் காரணியாகச் சோதனை விலங்கு மாதிரிகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. தைமோகுவினோனின் ஆன்டி ஆக்ஸிடெண்ட் பண்பு ஹெபடோ பாதுகாப்பில் முக்கியப் பங்கு வகிக்கிறது. எனவே, தைமோகுவினோன் பல நச்சுக் காரணிகள் மற்றும் மருந்துகளிலிருந்து கல்லீரலைப் பாதுகாப்பதற்கும் மற்றும் கல்லீரல் நோய்களுக்கான சிகிச்சைக்கும் இயற்கையான ஆற்றல் வாய்ந்தத் தீர்வாகும்.

### தைமோடஸ் மருந்தளவு

பரிந்துரைக்கப்படும் தைமோடஸ் மருந்தளவு 12.5மிகி-ஐ உணவிற்கு பிறகு அல்லது மருத்துவர் பரிந்துரைப்பதற்கேற்றவாறு எடுத்துக் கொள்ள வேண்டும். இதனை முழுவதாக விழுங்க வேண்டும், மெல்லவோ அல்லது உடைத்து சாப்பிடவோ கூடாது.

### தற்காப்பு நடவடிக்கைகள்:

கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்கள் இதைப் பயன்படுத்துவது பரிந்துரைக்கப்படவில்லை. அதன் செயல்திறன் மற்றும் பாதுகாப்பு ஆகியவை குழந்தைகளில் ஆய்வுச் செய்யப்படவில்லை.

### பாதுகாப்பு:

தைமோக்வினோனின் விஞ்ஞான மதிப்புப் பல பத்தாண்டுகளாக நிறுவப்பட்டுப் பல வெளியீடுகள் மூலம் அதன் உள்ளார்ந்த பாதுகாப்பு நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆரோக்கியமானவர்களுக்குத் தைமோட்டாஸ் ஒற்றை டோஸாக 1000 மி.கி வரை பாதுகாப்பாக நிர்வகிக்கப்படுகிறது. நீரிழிவு நோயாளிகளுக்குத் தினமும் 100 மி.கி மூன்று மாதங்களுக்குப் பாதுகாப்பாக வழங்கப்படுகின்றன. சிலருக்கு அதிக அளவுத் தைமோகுவினோன் வயிற்று அசௌகரியம், வயிற்றுப்போக்குப் போன்றவற்றை ஏற்படுத்தும். அவை பொதுவாக லேசானவை மற்றும் நிலையற்றத் தன்மைக் கொண்டவை.

### சேமிப்பு:

25°C - க்குக் கீழே சேமிக்கவும்.

### விளக்கக்காட்சி:

தைமோட்டாஸ் 12.5 மி.கி. 30 மாத்திரைகள் கொண்ட ஒரு பாட்டிலில் கிடைக்கும்

Manufactured by:

INTAS


**INTAS PHARMACEUTICALS LTD.**

Plot No. 457, 458, Sarkhej - Bavla Road, Vill: Matoda,
Ta: Sanand, Dist: Ahmedabad-382 210. India
Customer Care: +91 079 6157 7000
Email: thymotas@intaspharma.com


INP011
10 4807 0 6005082

Back Side